## மந்திரப்பாவை போற்றிகள்



மனநிறைவை தரவல்ல மகத்தான ஆற்றலைக் கொண்ட இப்பாவையின் போற்றிகளை, அகத்தியர் பெருமான் எழுதியுள்ளார். சித்தர்களின் யோகங்களை பழுதுபடாமல் காத்தருளும் இப்பாவை நல்லோரின் நற்செயல்களுக்கும், வேண்டுதல்களுக்கும், குறைவு ஏற்படாவண்ணம் துணையிருந்து அருள்புரிகின்றாள்.

இப்பாவையே, பராபரை, வாலை, மனோன்மணியாள் என புருவச்சுடர் மத்தியிலே திரிகோண சச்தியாக உயிர்களுக்குள் இருந்து காத்து வருகிறாள்.

இவரை வழிபட கால, நேர, திதி, நட்சத்திரங்கள் ஏதுமில்லை. எல்லா வினாடிகளும் பாவைக்குரிய நேரம். மனம் எப்போது தடுமாறுகின்றதோ, சோர்வடைகின்றதோ, பயத்தால், குழப்பத்தால், எதிரிகளால், அஞ்சுகின்றதோ அக்காலமெல்லாம் உடனடியாக பாவையின் திருவுருவத்தை மனதில் எண்ணி அவருடைய போற்றிகளை மானசீகமாக கூறி வழிபட்டாலே போதுமானது. அந்த வினாடியே அவர்களை சூழ்ந்திருந்த துன்பம் அகல்வதற்கு உரிய வழிகள் தோன்றும்.

எனினும் இப்பாவையை நாளும் நெய் சுடர் விளக்கேற்றி, திருஉருவம் அலங்கரித்து இனிப்பு (அ) பொரி, கடலை பிரசாதமாக வைத்து, மாலையில் வழிபடுவதின் மூலம் வீட்டிலுள்ள கெட்ட சக்திகள், வாஸ்து தோஷங்கள், திருஷ்டி, பொறாமை ஆகிய தோஷங்கள் அறவே அகன்று விடும். எதிரிகளால் ஏவப்படும் மந்திரத் தொல்லைகள் யாவும் பாவை போற்றி சொல்லி வழிபடுவோரையும், அவர்தம் குடும்பத்தினரையும், வீட்டையும் அண்டாமல் காக்கும் வல்லமை வாய்ந்தது.

இப்பலன்கள் முழுமையாக பெற விரும்புவோர் இயன்றபோது அமாவாசை, பௌர்ணமி, ஞாயிறு, இக்காலங்களில் ஆலயம் வந்து, பாவையை தரிசிப்பதின் மூலம், பாவை மற்றும் சித்தர்களின் ஆசீர்வாதமும் ஒருசேரப் பெற்று குடும்பம் சிறப்பாக செழிக்க தொடங்கும்.

### போற்றிகள்

ஓம் அம்பரமே அகண்டமே ஆதித் தாயே போற்றி
ஓம் ஆதியந்தமில்லாத அரூபத் தாயே போற்றி
ஓம் சம்பரையே மவுன ஞானத் தெளிவே போற்றி
ஓம் சச்சிதானந்த வெளித் தாயே சுடரே போற்றி
ஓம் நம்பரையே நாதாந்த கருணை வித்தே போற்றி
ஓம் உம்பரையே உம்பருக்கும் எட்டா முதலே போற்றி
ஓம் அரி அயனுக்கும் எட்டா செவ்வண்ணமே போற்றி
ஓம் ஓங்காரம் கடந்து நின்ற ஒளிப் பெண்ணே போற்றி
ஓம் ஒளியாகி ஒளி நிறைந்த வெளியுமானாய் போற்றி
ஓம் ஒன்றாகி இரண்டாகி உறுதியாகி நின்றாய் போற்றி 10

ஓம் மவுன ரச யோகமெனும் ஞானமானாய் போற்றி
ஓம் தெளிவாகி தெளிவினுள்ளே ஒளியுமானாய் போற்றி

ஓம் சித்தாகி ரிஷிகள் முக்தர்கள் மவுனமானாய் போற்றி
ஓம் நெளிவாகி சுழிவாகி பின்னர் தெளிவானாய் போற்றி
ஓம் நேத்திரத்துக்கு அடங்காத பூரண ஒளியே போற்றி
ஓம் பூரணமே கருணை வளர் போதத் தாயே போற்றி
ஓம் போத மயமான சிவயோகத் தாயே போற்றி
ஓம் காரணமே கண் நிறைந்த கமலத்தாயே போற்றி
ஓம் கமலரச பூரணமாய் நின்ற மாதே போற்றி
ஓம் பூரணமாய் சகலசித்தும் தானே ஆனாய் போற்றி 20

ஓம் மகாமந்திர சொரூபமதாய் நின்ற தாயே போற்றி
ஓம் சகல உயிர் பிராண சக்தியானாய் போற்றி
ஓம் சப்த சத்த சித்தமுமானாய் போற்றி
ஓம் கண்களில் காண்கின்ற கற்பூர தீப மாதே போற்றி
ஓம் கயிலாய வாசமுள்ள கமலத் தாயே போற்றி
ஓம் பூணுகின்ற சத்தாகி சித்துமாகி நின்றாய் போற்றி
ஓம் பூரணமாய் ஆனந்தமாய் பரவெளியில் நின்றாய் போற்றி
ஓம் ஊணுகின்ற சித்தமும் சுத்த தத்துவமுமானாய் போற்றி
ஓம் ஊஞ்சையுள்ள நாதவிந்துக் காரணமானாய் போற்றி
ஓம் தோன்றுகின்ற வெளி ஒளியின் ஜோதியானாய் போற்றி 30

ஓம் ஜோதி என்ற ஆதிஅந்த வடிவமானாய் போற்றி
ஓம் வடிவாகி முடிவாகி மாலும் காணா நிலைபெற்றாய் போற்றி
ஓம் மண்ணுயிர்க்கெல்லாம் சக்தி மயமாக இருப்பாய் போற்றி
ஓம் அடியாகி நடுவாகி வானும் தாண்டி விரிந்தாய் போற்றி
ஓம் அண்ட சராசரங்களுடன் கலந்து இருப்பாய் போற்றி
ஓம் தானாகி நீயாகி முடிவில் ஒன்றானாய் போற்றி
ஓம் மூச்சாகி மூச்சற்ற பொருளுமாகி வெளியுமானாய்போற்றி
ஓம் உருவாகி அருவாகி அருஉருவ சக்தியுமானாய் போற்றி
ஓம் விளங்கி நிற்கும் ஆனந்தப் பொருளுமானாய் போற்றி
ஓம் பொருளான வேதாந்த சித்தாந்த பொருளே போற்றி 40

ஓம் சமரசப் போக்கின் புனிதப் பலனே போற்றி
ஓம் அருளாகி அருளிருந்த அகண்டமுமானாய் போற்றி
ஓம் அளவற்ற ஆகாச ரூபமானாய் போற்றி
ஓம் மருளாகி மருள் நீக்கும் அறிவுமானாய் போற்றி
ஓம் மகத்தான ஜோதி சிவ சாட்சியானாய் போற்றி
ஓம் இருளாகி ஒளியாகி வெளியுமானாய் போற்றி
ஓம் ஏகத்தத்துவ பூரண சக்தி பாவையே போற்றி
ஓம் தாயாகி தந்தையாகி பின்னர் சேயுமாவாய் போற்றி
ஓம் சகல உயிர்ப் பிராணிகளின் ஜீவனானாய் போற்றி
ஓம் காயாகி கனியாகி இரசமுமானாய் போற்றி 50

ஓம் மண்ணாகி விண்ணாகி பஞ்சவித சுடரானாய் போற்றி
ஓம் நினைவற்ற இடத்தில் நாதமணி ஓசையாவாய் போற்றி
ஓம் கட்டுப்படா மனமதில் ஊமை என இருப்பாய் போற்றி
ஓம் பெரும் பெரும் கண்டங்களாக விரிந்த மூலமே போற்றி
ஓம் பேரண்டமான பூரண மந்திரப்பாவையே போற்றி
ஓம் பூரணமாய் காரணமாய் புத்தியுமாய் விளங்குவாய் போற்றி
ஓம் போக்காகி வரத்தாகி நிலைத்துமாகி இருப்பாய் போற்றி
ஓம் காரணமாய் நிற்குணமாய் கருணையாய் இருப்பாய் போற்றி

ஓம் கருணை சிந்தையில் களிப்புடன் அமர்வாய் போற்றி
ஓம் எண்ணடங்கா அண்டங்களின் விசையுமானாய் போற்றி 60

ஓம் ஒன்றாகி பலவாகி விரிவாகி வெளியானாய் போற்றி
ஓம் சொல்லாகி குறியாகி பொருளுமானாய் போற்றி
ஓம் வேதாந்தக் காட்சியும் அதன் குறியுமானாய் போற்றி
ஓம் குணமாகி மணமாகி அதுவும் கடந்திருப்பாய் போற்றி
ஓம் ஆதியந்த சூட்சுமத்தின் வழியுமாவாய் போற்றி
ஓம் யோகநெறி சித்தாக வெளிப்படுவாய் போற்றி
ஓம் சிறிதாகி பெரிதாகி ஜீவனுமாக இருப்பாய் போற்றி
ஓம் தெளிவான ஜீவநிலை ஆதாரமாக நிற்பாய் போற்றி
ஓம் நான்கு வேதங்களின் முடிவே பூரண ஒளியே போற்றி
ஓம் அஷ்டாங்க யோகப் பலனே போற்றி 70

ஓம் பேரொளியாய் சிற்றொளியாய் நிற்கும் தாயே போற்றி
ஓம் ஆதார மூலமான மந்திரப்பாவையே போற்றி
ஓம் தண்ணொளியும் விண்ணொளியும் தானாகியிருப்பாய் போற்றி
ஓம் ஐம்பூத விரிவும் விரியச் செய்தாய் போற்றி
ஓம் ஐம்பூத செயலாகி பலனாகி பாரில் விரிந்தாய் போற்றி
ஓம் ஜடப்பொருளில் ஐம்புலன்களானாய் போற்றி
ஓம் ஐவகை உணர்வறியும் அறிவுமானாய் போற்றி
ஓம் சேயாகித் திருவாகி செல்வமுமானாய் போற்றி
ஓம் தேவி மனோண்மணியான கண்ணே போற்றி
ஓம் கண்ணாகி கண் நிறைந்த காட்சியானாய் போற்றி 80

ஓம் கருணை வளர் கற்பூர தீபமானாய் போற்றி
ஓம் ஒன்றாகி சக்தி சிவம் இரண்டுமானாய் போற்றி
ஓம் சூரிய சந்திர பரம் என முச்சுடரானாய் போற்றி
ஓம் நால்வேதமும் ஐம்பத்தோரு மந்திர அட்சரங்களுமானாய் போற்றி
ஓம் வேதாந்த பஞ்சகரத்தாள் ஐவகை சக்தியானாய் போற்றி
ஓம் உண்மை விளங்கும் சடாட்சரம் ஆறுமானாய் போற்றி
ஓம் முக்தியுள்ள வகை தோற்றம் ஏழுமானாய் போற்றி
ஓம் காக்கும் அஷ்டாட்சரங்கள் எட்டுமானாய் போற்றி
ஓம் ஆதி நவகோள்களுக்கு தீட்சையுமானாய் போற்றி
ஓம் ஓமென்ற தீட்சை மந்திரத்தில் உயிரானாய் போற்றி 90

ஓம் ஓங்கார ரீங்கார உருவுமானாய் போற்றி
ஓம் நாமென்ற நவ்வுடனே மவ்வுமானாய் போற்றி
ஓம் நலமான சிவ்வுடனே வவ்வும் யவ்வுமானாய் போற்றி
ஓம் தாமென்ற ஐயுடனே கிலியுமானாய் போற்றி
ஓம் சகல உயிர்களில் சவ் என்று நின்ற பாவையே போற்றி
ஓம் தாயாகி மூலகணபதியின் ஓங்காரமானாய் போற்றி
ஓம் தண்மையுள்ள சுவாதிட்டான பிரம்மனுமானாய் போற்றி
ஓம் மால் உறையும் மணிபூரக மந்திரமானாய் போற்றி
ஓம் தீயின் சுடரில் ருத்திரனுமாய் விளங்குவாய் போற்றி
ஓம் மகேஸ்வரருடன் மகேஸ்வரியாய் இருப்பாய் போற்றி100

ஓம் சதாசிவனுடன் மனோண்மணியாய் ஒளிர்வாய் போற்றி
ஓம் சாகாக்கலை அறிவிக்கும் ஞானப்பொருளே போற்றி
ஓம் ஞானவாள் கரமேந்தி அஞ்ஞான வனமழிப்பாய் போற்றி

ஓம் கேடயம் கைக்கொண்டு தீவினை தடுத்தாள்வாய் போற்றி
ஓம் மோனப் புன்னகையில் உண்மை ஞானம் உணர்த்துவாய்போற்றி
ஓம் குருவாய் அமர்ந்து உபதேசம் புரிவாய் போற்றி
ஓம் மலரடி சரணடைந்தோம் மந்திரப்பாவையே போற்றி
ஓம் மாசற்ற அருளுடன் பொருளும் வலிமையும் தருவாய் போற்றி108